1981 பிப்ரவரி 9]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பல கால்வாய்கள் காலாகாலத்திலே பராமரிக்கப்படாததன் காரணமாக, பழுதடைந்து இருக்கிறது என்று பல முறை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. இதைப் போக்குவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தும்பளஹல்லி நீர்த்தேக்கத் திட்டம்

*வினா எண். 252—திரு. மு. ப. முனுசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தும்பளஹல்லி நீர்த்தேக்கத் திட்டத்தின் கீழ் பாசன வசதிக்கு நிலம் சர்வே செய்ததின் தொடர்பாக பெசுஹள்ளி ஊராட்சி, இண்டமங்கலம் ஊராட்சி, காரப்பனள்ளி, பூமாண்ட அள்ளி, மல்லிக் குட்டை ஊராட்சிகளுக்கு கால்வாய் விஸ்தரிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : வினாவில் குறிப்பிடப்பட்ட எல்லா கிராமங்களும் தும்பலஹல்லி நீர்த்தேக்கத்திலிருந்து சுமார் 5 முதல் 8 மைல் தொலைவில் உள்ளதாலும், சுமார் 131 மி. க. அடி கொள்ளளவுடைய இந் நீர்த்தேக்கத்திலிருந்து 2184 ஏக்கர் புஞ்சை நிலங்களுக்குப் புதிதாகப்பாசனமளிக்கவும், 326 ஏக்கர் நிலங்களுக்கு பாசன உறுதி அளிப்பதற்கும், 96 ஏக்கர் நிலங்களின் பாசன பற்றாக் குறையைப் போக்குவதற்கும் மட்டுமே போதுமானதாக உள்ளதாலும் குறிப்பிட்டுள்ள கிராமங்களுக்குப் பாசன விஸ்தரிப்பு செய்ய தற்போதைக்கு இயலாது.

திரு. மு. ப. முனுசாமி: மாண்புமிகு பேரவைத்தலைவரவர்களே தும்பளஹல்லி நீர்த்தேக்க திட்டம் எடுத்துக் சொள்ளப்பட்டு ஆரம்பிக்கும் போது தர்மபுரி நகரத்திற்கு குடிதண்ணீர்கொடுப்பதற்கான திட்டம் அதிலே சேர்க்கப்பட்டது. இந்தக் குடிதண்ணீர் கூட சின்னாறு நீர்த்தேக்கத்திற்குத் திருப்பி விடப்பட்டதால் வீணாகிறது. பைசு அள்ளி, கானப்பனஅள்ளி பூமாண்ட அள்ளி, மல்லிக்குட்டை ஆகிய இந்தக் கிராமங்களுக்கு ஏறத்தாழ 900 ஏக்கர் சர்வே செய்து அந்த

[1981 பிப்ரவரி 9

நிங்களுக்குத் தண்ணீர் கொடுப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகச் சொல்லப்பட்டிருந்தது. இப்போது எடுத்துக் கொள்ளப்பட இயலாது என்று அமைச்சர் அவர்கள் பதிலளிக்கிறார்கள். ஆனால், அந்தப் பகுதி பாசன வசதி இல்லாமல் வறட்சியான பகுதி. அதை மேம்பாடடையச் செய்வதற்கு அங்கே இத்திட்டத்தை விஸ்தரித்து, இந்த அரசு தண்ணீர் அளிக்க முன்வருமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 9–40]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தும்பளஹல்லி நீர்த் தேக்கத் திட்டத்தில் 131 மிலியன் கன அடி நீர்தான் இருக்கிறது. எனவே, இந்த நீரை வைத்துக் கொண்டு எட்டு மைல் தூரத்திலுள்ள பல கிராமங்களுக்கு பாசன வசதி அளிப்பது என்பது இயலாத நிலையில் உள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறேன். அணைக்கட்டு கட்டப்பட்டிருப்பதன் காரணமாக கோட்டுஹல்லி, உடனஹல்லி, காரியமங்கலம் போன்ற இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கர்களுக்கு ஏற்கனவே பாசன வசதிகளுக்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்ட அக்கறையோடு கேட்கிற காரணத்தால் திரும்பவும் அது பற்றிப் பரிசீலனை செய்யலாமே தவிர, உத்திரவாதமாக எடுத்துக் கொள்ளமுடியும் என்று சொல்ல இயலாது.

திரு. மு. ப. முனுசாமி : ஏற்கனவே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப் படும்போதே இந்த கிராமங்களுக்குத் தண்ணீர் அளிக்க பெறும் என்ற உத்தரவாதம் அளிக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் அரசையும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கிராமங்களுக்கு இந்தத்தண்ணீர் தவிர வேறு எங்கிருந்தும் தண்ணீர் வர இயலாத நிலை இருப்பதால் பொது மக்களின் குறையைப் போக்க கண்டிப்பாக இதிலிருந்து தண்ணீர் கொடுக்க உத்தரவாதம் கொடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : நீரின் கொள்ளளவு எவ்வளவு என்பதைத் தெரிவித்திருக்கிறேன். 131 மிலியன் கன அடி தண்ணீர் ஏற்கனவே நான் தெரிவித்த பல பகுதிகளுக்கு வழங்கப்படுகிறது. கூடுதலாகக் கொடுக்க வாய்ப்பு இருக்குமா என்பதைப் பரிசீலித்தப்பிறகு அரசுத் தரப்பில் உறுதிமொழி கூறமுடியுமே தவிர தற்போது எதுவும் கூற இயலாது.